[1992 மார்ச் 26

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சட்டத்தில் இடம் இல்லை என்றாலும் சம்பிராயதாயத்தில் நடைமுறையில் இன்றைக்கு அந்தப் பழக்கம் இருக்கிறது. சம்மதம் பெற்ற பிறகுதான் திருமணங்கள் நடைபெறுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 358, திருமதி கே. எம். கலைச்செல்வி மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

358—

காட்பாடி தனித்தாலுகா.

*4005— திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காட்பாடி தனித் தாலுகாவாக எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காட்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவரின் ஆட்சியின்போது காட்பாடியை தனி தாலுக்காவாக பிரிக்கக் கேட்டு, அங்கே அதற்கு ஆதாரமாக துணைக் கருவூலம் ஒன்று இயங்கவும் அனுமதிக்கப்பட்டு உள்ளது. எனவே பொன்மனச் செம்மலின் பிரதிபலிப்பாக விளங்கும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அரசு இதை அவசியம் எங்களுக்குச் செய்து தர வேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு வேண்டிக் கொள்கிறேன். காட்பாடி தொகுதி என்பது ஸ்கேட்டர்டு ஏரியா. ஒரு சாதாரண ஜாதிச் சான்றிதழ் வாங்குவதானாலும்கூட அவர்கள் குடியாத்தம் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எங்கள் காட்பாடியை தனித் தாலுக்காவாகப் பிரித்துத் தர வேண்டும் என்று வேண்டி அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1992 மார்ச் 26]

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி இன்றைக்கு குடியாத்தம் வட்டத்தில் இருக்கிறது. குடியாத்தத்தை தலைமையிடமாகக் கொண்ட வட்டம் அது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி காட்பாடி என்பது குடியாத்தத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆகவே, மக்கள் வட்ட ஆட்சியர் இடத்தில் செல்வதுசற்று தூரம் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. அரசு ஏற்றுக்கொண்டாலும் அந்த காட்பாடி என்பது வேலூரை தலைமையிடமாகக் கொண்ட வேலூர் வட்டத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில்தான் உள்ளது. ஆகவே, காட்பாடி, காட்பாடியைச் சேர்ந்த கிராமங்களை வேலூர் வட்டத்தில் சேர்க்கலாமா என்றும் அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 359, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

359—

திசையன்விளை சலவைத் தொழிலாளர்களுக்கு வசதி

*41 திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் திசையன்விளையில் சலவைத் தொழிலாளர்களுக்கு டோபிகானா மற்றும் நீர் வசதி ஏற்படுத்தித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த திசையன்விளையில் டோபிகானா வசதிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இடத்தை எல்லாம் பார்வையிட்டு அந்த நிலம் அரசு நிலமாக இருந்தபோதிலும் கூட வருவாய்த்துறை அதை ஒப்படை செய்ய தயக்கம் காட்டுகின்ற காரணத்தால் அது கடந்து கொண்டேஇருக்கிறது ஆகவே, தான் இந்தக் கேள்வியை இங்கே கொடுத்தேன்.